1982 பிப்ரவரி 17]

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருச்சி, மதுரை, திருநெல்வேலி, கும்பகோணம் ஆகிய 4 இடங்களில் அமைக்க இருக்கின்ற நீதி மன்றங்கள் விரைவில் நடைமுறையில் செயலுக்கு வர இருக்கின்றன. பப்ளிக் பிராசிகியூட்டர்களைப் பொறுத்தவரையில், இந்த நீதிமன்றங்களுக்குத் தனியாக போடப்படுவார்கள். அப்படிப் போடுகின்றபோது' தாழ்த்தப்பட்ட மக்கள் நலனுக்குப் புறம்பாக செயல்படாதவர்கள் நியமிக்கப்படுவார்கள் என்ற உறுதியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ஜி. மூர்த்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புரொட்டெக்ஷன் ஆப் சிவில் ரைட்ஸ் ஆக்ட்-படி தாழ்த்தப்பட்ட மக்களுக்கு எதிரான குற்றங்களை விசாரிப்பதற்குத் தனி கோர்ட் அமைக்க அரசு உத்தரவிட்டுள்ளதாகச் சொன்னார்கள். அது பாராட்டுக்குரியது. ஆனால், தாழ்த்தப்பட்ட மக்கள், சாதாரண அரிசனங்கள் பழிவாங்கப்படும் நோக்கத்துடன், பல வழிகளில் திருட்டு வழக்கு. மற்றும் சில்லறை வழக்குகளை அவர்கள்மீது போடுகிறார்கள். இந்த வழக்குகளை விசாரிப்பதற்கு இந்த கோர்ட்டுக்கு அதிகாரம் வழங்கப்படுமா? ஜுடிசியல் பர்ஸ்ட் கிளாஸ் மாஜிஸ்திரேட் நியமிக்கப்படுவதாக இருந்தால், தாழ்த்தப்பட்ட மக்கள் மாஜிஸ்திரேட்டுகளாக நியமிக்கப்படுவார்களா? குறைந்தபட்சம், அரசு வழக்கறிஞர்களையாவது தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சார்ந்தவர்களை நியமிக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஐ.பி.சி., கிரிமினல் புரசீஜர் கோட் ஆகியவைகளை ஒட்டிய குற்றங்கள் வருகின்றபோது, அவைகள் இங்கே வராது. தாழ்த்தப்பட்ட மக்களுக்குத் தனியாக சட்டம் இருக்கிறது. தனி நீதி மன்றங்கள், பொது நீதிமன்றங்கள் ஆகியவைகளில்தான் அவைகள் நடக்கும். அங்கே அவர்கள் நிரபராதிகள் என்று பரிகாரம் தேட வழியிருக்கிறது. இந்த ஸ்பெஷல் கோர்ட்டுகளைப் பொறுத்தவரைக்கும், சரியான முறையில் வழக்கறிஞர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு, நான் ஏற்கனவே சொன்னதுபோல். தாழ்த்தப்பட்ட மக்கள் நலனுக்கு பாதகம் ஏற்படாமல் இருப்பவர்கள் நியமிக்கப்படுவார்கள்,

மத்திய அரசு தனி திட்டத்தின் கீழ் அபிவிருத்தி செய்ய எடுத்துக் கொள்ளப்பெறும் நகராட்சிகள்

*வினா எண் 232—திரு ப. வெங்கட்டசுப்பிரமணியம் மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மத்திய அரசு தனித் திட்டத்தின் கீழ் அபிவிருத்தி செய்வதற்காகத் தமிழ்நாட்டில் உள்ள நகராட்சிகளை எடுத்துக் கொள்ளும் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், இத்திட்டத்தில் காஞ்சிபுரம் சேர்த்துக் கொள்ள நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்; (அ) ஆம்.

(ஆ) காஞ்சிபுரம் நகரின் மக்கள் தொகை ஒரு இலட்சத்திற்கு மேல் உள்ளதால், மத்திய அரசு தனித்திட்டத்தின் கீழ் எடுத்துக் கொள்ளப்படவில்லை.

[முற்பகல் 10.00]

மாண்புமிகு திரு. ப, வெங்கடசுப்பிரமணியம்: இந்த ஒரு லட்சம் மக்கள் தொகைக் கணக்கை மேலும் அதிகரிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

மண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்; ஒரு இலட்சமும் அதற்குக் குறைவாகவும் மக்கள் தொகை உள்ள சிறு நகரங்கள், பெரிய நகரங்களில் இந்த வேலைகள் முடிந்த பிறகு இதனை விரிவுபடுத்துவது பற்றிப் பரிசீலனை செய்யலாம்.

திரு. ப. வெங்கடசுப்பிரமணியம். அப்படி விரிவுபடுத்தும் காலத்திலே காஞ்சிபுரம் நகரத்தில் இந்தத் திட்டத்தை விரிவு படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம். இந்த அரசு அப்படி பரிந்துரைச் செய்வதைப் பற்றிப் பரிசீலனை செய்யும்.

திரு. மா. சின்னராசு. மத்திய அரசு திட்டத்தின் மூலமாக ஒரு இலட்சத்திற்கு அதிகமாக மக்கள் தொகை உள்ள நகராட்சிகளில் இந்தத் திட்டத்தை மேற்கொள்வதில்லை என்று சொன்னார்கள். ஒரு இலட்சத்திற்குக் குறைவாக மக்கள் தொகை இருக்கும் எந்தெந்த நகராட்சிகளில் இந்தத் திட்டம் செயல் படுத்தப்பட்டிருக்கிறது?

மாண்புமிகு திரு. எஸ. இராகவாந்தம். 23 சிறிய, நடுத்தர நகரங்கள் எடுக்கப்பட்டிருக்கின்றன. அந்தப் பட்டியலைப் படிக்க வேண்டுமென்று சொன்னால் படிக்கிறேன்.

குடிசை மாற்று வாரியம் மூலம் கட்டப்பட்ட வீடுகள்

*வினா எண் 233—திரு ஜே. எஸ். இராசு: மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) குடிசைமாற்று வாரியம் தொடங்கப்பட்டதிலிருந்து 1980 வரை எத்தனை வீடுகள் கட்டியிருக்கிறது?

(ஆ) அதற்கான மொத்த செலவு எவ்வளவு?